2013 *பிப்ரவரி* 8]

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

43—

மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம்

***1625—திரு. வி. முத்துக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலத்திலுள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விருத்தாசலம் தொகுதி, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு விருத்தாசலம், பெரிய வடவாதி கிராமத்தில் 1.53 ஹெக்டேர் நிலத்தில் சொந்தக் கட்டடம் மற்றும் ஓட்டுநர் பேருந்து தளம் கட்டுவதற்கு, ஒரு கோடியே, 59 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டு, கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டு, சிமெண்ட் பூச்சு வேலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் அந்தக் கட்டடம் திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.*

[2013 பிப்ரவரி 8

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் வேண்டுமென்று முதல் கூட்டத் தொடரில் கோரிக்கை வைக்கப்பட்டு, 2011 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில்தான் பணி தொடங்கப்பட்டு, தற்போது இரண்டு மாத காலமாகப் பணிகள் நடைபெறவில்லை. பணிகள் மிகவும் மந்தமான நிலையில் நடைபெற்று கொண்டிருக்கின்றன. ஆகையால், விரைவாக அந்தப் பணியை முடிப்பதற்கு மண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இப்போது மோட்டார் வாகன அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அந்தப் பகுதி, கிராமப் பகுதிகளைக் கொண்டதால் மதியம் 12.00 மணி முதல் 3.00 மணி வரை மின்சாரத் தடை உள்ளதால் பணிகள் தடைப்படுகின்றன. அதிகாரிகள் எந்தப் பணிகளையும் செய்ய இயலாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். பொது மக்களும் அவதிப்படுகிறார்கள். ஆகையால், மிக முக்கியமாக அவர்களுக்கு ஒரு ஜெனரேட்டர் உடனயாக வழங்க வேண்டும். அடுத்தபடியாக ரெக்கார்டு ரூமில் ரேக் இல்லாத நிலையில், முக்கியமான ஆவணங்கள் தரையில் வைக்கப்படுகின்றன. பொதுமக்கள் அமர்வதற்கு ஒரு பெஞ்சுகூட இல்லை. பொதுமக்கள் வெயிலில் நிற்கின்றார்கள். ஆகையினால் இந்த நிலைமையைப் போக்க, உடனடியாக அந்த வாடகைக் கட்டடத்திற்கு அடிப்படை வசதிகள் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய அரசியல் வரலாற்றில் போக்குவரத்துத் துறைக்குப் புத்துயிரூட்டி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 52 மோட்டார் வாகன ஆய்வாளர்கள், வாகனச் சோதனைக்குச் செல்கிறபோதும் சரி அல்லது விபத்துகள் ஏற்படுகிறபோது, அதை ஆய்வு செய்யச் செல்கிறபோதும் சரி, அவர்கள் தங்களுடைய இரு சக்கர வாகனத்தில் செல்கின்ற நிலையை மாற்றி, 52 மோட்டார் வாகன ஆய்வாளர்கள்

2013 பிப்ரவரி 8]

அனைவருக்கும் ரூபாய் இரண்டு கோடியே 86 இலட்சம் நிதியைக் கொடுத்து, புதிதாக ஜீப்புகளை வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) விரைவில் மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்குண்டான அந்த ஜீப்புகள் வழங்கப்படவுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த ஒன்றரை ஆண்டுகளில் 11 அலுவலகக் கட்டடங்கள், 3 ஓட்டுநர் தேர்வுத் தளங்கள், ஒரு சோதனைச் சாவடிக்குண்டான கட்டடம் என ரூபாய் 9 கோடியே 73 இலட்சம் மதிப்பீட்டிலான கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் அனைத்து வசதிகளுடன்கூடிய கட்டடங்களாக, பொது மக்களுடைய பயன்பாட்டிற்குண்டான இருக்கைகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்ட கட்டடங்களாக மக்களுடைய பயன்பாட்டில் இன்று இயங்கி வருகின்றன.

அதேபோன்று, கூடுதலாக 4 புதிய ஓட்டுநர் தேர்வுத் தளங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்குண்டான 4 கட்டடங்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கான 5 கட்டடங்கள் என 12 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிதியை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி, இந்தக் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழகத்தில் இருக்கிற அனைத்து மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களுக்குண்டான அனைத்துக் கட்டடங்களும் அனைத்து வசதிகளையும் பெற்று முழுமையாக சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, படிப்படியாக இந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. விரைவில், குறிப்பாக இரண்டு மாத காலத்தில் தங்களுடைய பகுதியில் இருக்கிற அந்தக் கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு, பொது மக்களுடைய பயன்பாட்டிற்கு அந்தக் கட்டடம் திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணிகள் முடிவடைய நிச்சயமாக 7 மாத காலம் ஆகும். ஏனென்றால், இரண்டு மாத காலம் பணியே நடைபெறவில்லை. நிச்சயம் 7 மாத காலம் ஆகும். ஆகையால், வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அந்தக் கட்டடத்திற்கு ஜெனரேட்டர் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும். மக்கள் அமரக்கூட இடம் இல்லை. இந்த 7 மாத காலத்திற்காவது போதுமான வசதிகளை அந்த மக்களுக்கு ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இயங்கி வருகிற அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. நிச்சயம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இரண்டு மாத காலத்தில் அந்தக் கட்டடப் பணியை முடித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பகுதி மக்களுடைய பயன்பாட்டிற்குக் கொண்டு வரும் என்ற உத்தரவாதத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல ஏற்கெனவே இருக்கிற அலுவலகங்களில் மக்களுக்குத் தேவையான வசதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய அரசு நிச்சயம் விரைவில் செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.